அவர் bail move பண்ணியிருக்கிறார். இருந்தாலும்கூட, காவல் துறை அதிகாரிகள் அவரை விடக்கூடாது என்று வற்புறுத்தி, அவர் வரமுடியாத சூழ்நிலையை உருவாக்கி வருகிறார்கள். ஆகவேதான் இதை நாங்கள் வலியுறுத்துகிறோமே தவிர, அவர் bail-இலே வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார். ஆனால் காவல் துறை அதற்கு முழு எதிர்ப்புத் தெரிவித்து, அவரை bail-இலே விடக்கூடாது என்று கட்டாயப்படுத்திக் கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. அதைப்போல, அங்கேயிருக்கிற, நீதிமன்றத்திலே இருக்கிற அரசு வழக்கறிஞரும் அதையே வலியுறுத்திக்கொண்டிருக்கிற காரணத்தால், அவரை உடனடியாக விடுதலை செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி, அமர்கிறேன். (குறுக்கீடு)

(ஈ) வினாக்கள்–விடைகள் — உரிய நேரத்திற்குள் முடிக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கமாக, கேள்வி நேரம் ஒரு மணி நேரம் நடப்பது வழக்கம். ஆனால் கேள்வி நேரம் அதிகமாக நீடித்துக்கொண்டு போகிறது. கேள்வி கேட்கின்ற உறுப்பினர்கள் இரண்டு வரிகளிலேதான் கேட்க வேண்டும். ஆனால் அவர்கள் உரை நிகழ்த்துவது போன்று இந்த அவையிலே பேசிக்கொண்டிருக்கின்றார்கள். அதனாலே நாங்கள் பேசுகின்றபோது 5 நிமிடங்கள், 7 நிமிடங்கள் என்று பேச வேண்டிய ஒரு நிலை ஏற்படுகிறது. இனிமேலாவது இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படாமல் எங்களுக்கு ஒவ்வொரு மானியத்திலும் ஒதுக்கப்பட்டிருக்கின்ற, 23 நிமிடங்களை நீங்கள் ஒதுக்கித் தர வேண்டும்; கேள்வி நேரத்தை 10-30 மணிக்குள்ளாக முடிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, மணியடித்து உட்கார வைத்துவிடுவோம்! (குறுக்கீடு)

(உ) ஸ்ரீபெரும்புதூர், ஹூண்டாய் நிறுவனத் தொழிலாளர்களை விடுதலை செய்யக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

2008 ஏப்ரல் 30]

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைய தினம் மே ஒன்றாம் தேதி, தொழிலாளர்களுடைய தினம். இத்தகைய மே தினத்தில் தொழிலாளிகள் -- குறிப்பாகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட இயக்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னதாகவே, பல ஆண்டுக் காலத்திற்கு முன்னால், தொழிலாளிகள் மே தினத்தைக் கொண்டாட வேண்டும், கோரிக்கைகள் வைக்க வேண்டுமென்று அன்றைக்கே பிரச்சாரங்கள் செய்தார்கள்; நூல் வெளியிட்டார்கள். அதற்காக இயக்கமே நடத்தப்பட்டது. அப்படிப்பட்ட அந்த உன்னத நாள் நாளைய தினம் வரக்கூடிய சூழ்நிலையில், ஸ்ரீபெரும்புதூரில், ஹூண்டாய் கம்பெனியில் நான்காவது முறையாகத் தொழிற்சங்கக் கொடியை ஏற்றச் சென்ற C.I.T.U.-வினுடைய தலைவரும் 500 தொழிலாளர்களும் இன்றைக்கு அந்த நிருவாகத்தினுடைய அடியாட்களால் தாக்கப்பட்டிருக்கிறார்கள். காவல் துறையினரும் அங்கே தொழிலாளர்கள்மீது தடியடியை நிகழ்த்தியிருக்கிறார்கள். இதனால் தொழிலாளர்கள் சிலர் படுகாயமடைந்து, ஒருவர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். தொழிலாளர்கள்மீது வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. இத்தகைய சூழ்நிலையிலே 500 பேர் கைது செய்யப்பட்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில் ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி பாலபாரதி, அறிவிப்பு ஏதாவது கொடுத்திருக்கிறீர்களா?

செல்வி கே. பாலபாரதி: கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வரவில்லையே?

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய சூழ்நிலையில் நீதிமன்றத்தினுடைய அனுமதியைப் பெற்று, கடந்த மூன்று முறைகள் தொழிற்சாலைக்கு முன்னால் கொடியேற்றச் சென்றும், நிர்வாகம் அனுமதிக்கவில்லை. ஏற்றிய கொடியை அப்புறப்படுத்துகிறார்கள். தொழிலாளர்கள்மீது அடியாட்களை ஏவுகிறார்கள். இத்தகைய சூழ்நிலையிலே அந்த நிருவாகத்தின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழிலாளர்கள் கொடியேற்றுவதற்கு உரிமை படைத்தவர்கள். ஒரு தேசத்திற்குக் கொடி எவ்வளவு முக்கியமோ, அதேபோன்று தொழிலாளர்களுக்குத் தொழிற்சங்கக் கொடி என்பது முக்கியம். வரலாற்றிலும், இலக்கியத்திலும் கொடியேற்றுவது என்பது ஒரு இயல்பான காரியமாகவே இருந்து வருகிறது. ஆகவே, மதிப்பிற்குரிய நமது மாண்புமிகு முதல்வர்

அவர்கள் தொழிலாளர் நலக் கோரிக்கையில் தொழிலாளர்களுக்குச் சாதகமானப் பல முடிவுகளை அறிவித்திருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், இந்தப் பிரச்சினையிலே அரசும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உடனடியாகத் தலையீடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசே ஒரு தொழிலாளர் நல அரசுதான். திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதும் தொழிலாளர்கள் பக்கம் இருக்கக்கூடிய அரசே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) எந்த முதலாளிக்கும் ஆதரவு தரக்கூடிய அரசு அல்ல. ஆனால் அங்கே நடைபெற்ற சம்பவம் என்னவென்றால், நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள், அது ஹூண்டாய்க்குச் சொந்தமான நிலம் என்று நினைத்துக்கொண்டு, ஒரு கொடியை நட்டிருக்கிறார்கள். அந்தக் கொடியை எங்கே நட்டிருக்கிறார்கள் என்று கேட்டால், சிப்காட்டுக்குச் சொந்தமான நிலத்திலே நட்டிருக்கிறார்கள். SIPCOT நிறுவனம் பல தொழிற்சாலைகளுக்கு நிலம் கொடுக்கக்கூடிய நிறுவனம். அவர்கள் தங்களுடைய நிலத்திலே கொடியேற்றியதைப் பார்த்துவிட்டு காவல் துறைக்குப் புகார் செய்திருக்கிறார்கள். காவல் துறையினர் அங்கே வந்திருந்து, அங்கே கொடியேற்றியவர்களை அகற்றியிருக்கிறார்கள். மற்ற விவரங்கள் அரசுக்குக் கிடைக்கவில்லை. அந்தத் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருந்தால் அரசாங்கம் அவர்களை விடுதலை செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும். *(குறுக்கீடு)*

முற்பகல் 11-00

(அ) வாகனங்களில் சிவப்பு விளக்கைப் பயன்படுத்துதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)* திரு. கோ. அரி, ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்